பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண்.696 **நாள் : 19.11.2026**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து காவல் நிலையப் பகுதிகளில் சாலையோரங்களில் நீண்ட நாட்களாக பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 900 வாகனங்களின் விவரங்கள் மாநகராட்சியின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
15 நாட்களுக்குள் உரிமை கோரப்படாத வாகனங்கள் மின்னனு ஏலம் மூலம் கழிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து காவல் நிலையப் பகுதிகளில் சாலையோரங்களில் நீண்ட நாட்களாக கேட்பாரற்று போக்குவரத்திற்கு இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 900 எண்ணிக்கையிலான பல்வேறு வாகனங்களை அப்புறப்படுத்தி கோட்டூர்புரம் காவல் நிலைய குடியிருப்பு வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாகனங்களின் விவரங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் www.chennaicorporation.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாகனங்களை உரிமை கோருவோர் சம்பந்தப்பட்ட காவல் நிலையமான சென்னை கோட்டூர்புரம் காவல் நிலையத்தினை இந்த செய்தி வெளியான 15 நாட்களுக்குள் அணுக வேண்டும். அவ்வாறு 15 நாட்களில் உரிமை கோரப்படாத வாகனங்களை மின்னனு ஏலம் மூலம் கழிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.

GREATER CHENNAI CORPORATION

PRESS RELEASE

P.R.No. 696 Date : 19.11.2026

Greater Chennai Police removed total 900 numbers of abandoned vehicles parked on roadsides causing obstruction to public & traffic in the Chennai all district, Police Station Limit have been removed and parked in the respective Kotturpuram Police Quarters premises. Details of these vehicles are published in the official website www.chennaicorporation.gov.in of Greater Chennai Corporation. The owners of those vehicles are requested to claim their vehicles within 15 days by approaching the respective Police Station, falling which action will be initiated to dispose the unclaimed vehicles by e-auction.

Issued by: Joint Director / Public Relations Officer,
Greater Chennai Corporation